செய்தி வெளியீடு எண்:26 நாள்:13.01.2021

# செய்தி வெளியீடு

நடைமுறை வாழ்க்கையிலும் தூய தமிழிலேயே பேசும் தனித்தமிழ்ப் பற்றாளர்கள் மூவருக்கு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வழியாகத் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) எனப் பரிசுத் தொகை 'தமிழ் அகராதியில் நாள் விழாவில்' 2019–2020 முதல் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்மொழிக் காப்பிற்கான ஆக்கத் திட்டம் என்பதால் தமிழறிஞர்கள் மற்றும் பொதுமக்களிடையே இத்திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. எனவே, பரிசு பெறுவோரின் எண்ணிக்கையையும், பரிசுத் தொகையையும் உயர்த்தி வழங்க வேண்டும் என்னும் தமிழறிஞர்கள், தமிழார்வலர்களின் கோரிக்கையினை ஏற்று, 'தூயதமிழ்ப் பற்றாளர்' விருதினைத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

37 மாவட்டங்களிலிருந்தும், மாவட்டத்திற்கு ஒரு தூயதமிழ்ப் பற்றாளர் என்ற வகையில் தகுதியானவரைத் தேர்ந்தெடுத்து விருதுத் தொகையும் தகுதியுரையும் 'தமிழ் அகராதியியல் நாள் விழா'வில் வழங்கப்படும் என இவ்விருதுக்கான அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தமிழ் அகராதியியல் நாள் விழா'விழாவின்போது, இயல்பாகவே தூய தமிழில் பேசுகின்ற தகுதி வாய்ந்தவர்களை 37 மாவட்டங்களிலிருந்தும் ஒருவர் வீதம் தெரிவுசெய்து அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் ஒவ்வொருவருக்கும் ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) எனப் பரிசுத் தொகை மற்றும் தகுதியுரை வழங்கப்படவுள்ளன. பரிசுத் தொகையைப் பெறுவதற்கு விருப்பமுள்ள, தகுதி வாய்ந்த தூயதமிழ்ப் பற்றாளர்கள் சொற்குவை.காம் (sorkuvai.com) என்ற வலைத்தளத்தில் உள்ள விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்து, நிரப்பி, 29.01.2021ஆம் நாளுக்குள் agarathimalar2020@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அஞ்சல் வழியாக இயக்கக முகவரிக்கோ 29.01.2021 மாலைக்குள் கிடைப்பது போல் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் விண்ணப்பிப்போரின் பகுதியில் உள்ள அரசு அலுவலர்கள், தமிழறிஞர்கள், ஆசிரியர்கள் ஆகியோரில் யாரேனும் இருவர் விண்ணப்பிப்பவரின் தூய தமிழ்ப் பற்றை உறுதிசெய்து வழங்கும் நற்சான்றிதழ்களையும் இணைத்து அனுப்ப வேண்டும். அத்துடன் நற்சான்று அளிப்போரின் ஒருபக்க அளவிலான வாழ்க்கைக்குறிப்புகளையும் (Bio-data) சேர்த்து அனுப்பி வைக்க வேண்டும்.

**இயக்கக முகவரி :** இயக்குநர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,<br>நகர் நிருவாக அலுவலக வளாகம், முதல் தளம், எண். 75,<br>சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.

**இயக்குநர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**